# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 24.07.2024 ஆம் தேதி புதன் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

<table>
<tr><td>1</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி நகராட்சிக்கு வருவாய் ஈட்டித்தரும் வகையில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து வார்டுகளிலும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக சொத்து சொத்துமதிப்பின் விலை விகிதத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><td>வ.எண்.</td><td>சொத்துமதிப்பின் விலை</td><td>பெயர் மாற்றக் கட்டணம்</td></tr>
<tr><td>1</td><td>ரூ. 1.00.000/ முதல் ரூ. 5.00.000/ வரை</td><td>ரூ. 500/.வீதம்</td></tr>
<tr><td>2</td><td>ரூ. 500.000/ க்கு மேல் ஒவ்வொரு இலட்சம் வரை</td><td>ரூ.500/க்கு கூடுதலாக ஒவ்வொரு இலட்சத்திற்கு கூடுதல் தொகை ரூ. 100/வீதம் வரை</td></tr>
</table>
பெயர் மாற்றக் கட்டணம் வசூலித்து , சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய நகரமன்ற அனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் அறிவிப்பு செய்யவும் அதற்காகும் தோராய செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>
அலுவலகக் குறிப்பு;<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண்1347/2023/அ2<br>
தீர்மானம் எண் : 75<br>
தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .</td></tr>
<tr><td>2</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது கொசு மருந்து அடிக்கும் கை தெளிப்பான் இயந்திரத்திற்கு கேஸ் சிலிண்டர் கையிருப்பில்லை . எனவே 300 எண்ணிக்கை வாங்கவும் அதற்கு தோராய செலவினம் ஒரு இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு;<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந.க.எண் 624/2024/எச்1<br>
தீர்மானம் எண் : 76<br>
தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .</td></tr>
<tr><td>3</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன, எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்கள் கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது . இப்பணியினை மேற்கொள்ள எஸ் . ஆர் . இஞ்சினிரிங் மேட்டுப்பாளையம் என்ற நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கப்பட்டு 10.06.2024 அன்று முடிவடைகிறது . இப்பணியானது அத்தியாவசியப்பணி என்பதால் அதே பணியினை மேற்கண்ட நிறுவனத்திற்கே அதே விலைப்புள்ளி விகிதத்திலேயே 11.06.2024 முதல் 08.09.2024 வரை 89 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும் , அதற்கான EPF & ESI சேர்த்து தோராய செலவினம்<br>
ரூ. 48.00 / இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு;<br>
அத்தியாவசியப்பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>
ந.க.எண் 2530/2022/எச் 1<br>
தீர்மானம் எண் : 77<br>
தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .</td></tr>
</table>

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்பொழுது கொசு ஒழிப்பு பணி நடைபெற்று வருகின்றது. கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான கொசு மருந்துகள் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் (TNMSC) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் தேவைக்கேற்ப வாங்கி கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7.00/இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 2386/2024/எச்<br>**தீர்மானம் எண் :** 78<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 5 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40F 2273 (Septic Tank Lorry) வாகனத்திற்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கிப் பணிமனை கோவை. தகுதிச் சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே , பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 2.50.000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| 1 | **செல்ப் மோட்டார் மற்றும் ஆல்டர்னேட்டர் O/H செய்ய வேண்டும்.** |
| 2 | **நான்கு வீல் பேரிங் செக்கப் செய்து கிரீஸ் மாற்ற வேண்டும்.** |
| 3 | **நான்கு வீல் பிரேக் O/H செய்து, வேஃகம் லீக் சரிபார்க்க வேண்டும்.** |
| 4 | **என்ஜின் ஆயில், கியர் & கிரவுன் ஆயில் மாற்றி ஆயில் பில்டர், டீசல் பில்டர் ஏர் பில்டர் மாற்ற வேண்டும்.** |
| 5 | **அனைத்து ஆயில் லீக் சரி செய்ய வேண்டும்** |
| 6 | **ஜாயிண்ட் யோக் ஷு டீத் புதியது மாற்றி கிராஸ் மாற்ற வேண்டும்.** |
| 7 | **டேங்க் மேல் பிளாட்பார்ம் சீட் புதியது மாற்ற, டேங்க் கேஜ் குழாய் புதியது மாற்ற வேண்டும்.** |
| 8 | **முன் பின் பம்பர் R/C செய்ய வேண்டும்.** |
| 9 | **கம்ப்ரஷர் மோட்டார் சர்வீஸ் செய்ய வேண்டும்.** |
| 10 | **வாகனத்தின் நான்கு ஸ்பிரிங் R/C செய்து, பின் மற்று புஷ்கள் மாற்ற வேண்டும்.** |
| 11 | **ஆல் லைட்ஸ் செக்கப் செய்து, பழுதடைந்ததை சரி செய்ய வேண்டும்.** |
| 12 | **வாகனம் முழுவதும் வர்ணம் பூசி, ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும்.** |
| 13 | **ஸ்பீடு கவர்னர் R/C செய்ய வேண்டும்.** |
| 14 | **முன்புற கேபின் டோர் டிங்கரிங் வேலை செய்ய வேண்டும்.** |
| 15 | **டீசல் டேங்க் கிளீனிங் செய்ய வேண்டும்.** |
| 16 | **ரேடியேட்டர் ரிசர்வாயர் டேங்க் புதியது மாற்ற வேண்டும்.** |

**அலுவலகக் குறிப்பு;**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 1268/2024/எச்1

**தீர்மானம் எண் :** 79

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 6 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3088/2022/தூ.இ. நி1 நாள்.23.02.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மேட்டுப்பாளையம் நகராட்சியில் இயங்கி வரும் உரக்கிடங்குகளான சிராஜ் நகர் மற்றும் நந்தவனம் (MCC) இவ்விரு உரக்கிடங்கிலும் சேகரமாகின்ற மக்கும் குப்பைகளை கொண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உரம் தயாரித்து "செழிப்பு" என்ற பெயரில் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டி உள்ளதால், அதற்கு இயற்கை உரமான (EM SOLUTION) நுண்ணுயிர் கரைசல் தயாரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு தேவையான கீழ்க்கண்ட பொருட்கள் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.1,50000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>வ.எண் / தேவையான பொருட்கள் / எண்ணிக்கை:<br>1 / தயிர் / 12 லிட்டர் / மாதம்<br>2 / மண்டை வெல்லம் / 20 கிலோ / மாதம்<br>3 / தவிடு / 300 கிலோ / மாதம்<br>4 / மரத்தூள் / 500 கிலோ / மாதம்<br><br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 2387/2024/எச்1<br>தீர்மானம் எண் : 80<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 7 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சேகரமாகின்ற குப்பைகளை பிரித்து சேகரித்து, சேகர மையத்திற்கு கொண்டு வரும் பணியினை Tectus கோவை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது. அந்நிறுவனம் தங்களிடம் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான கையுறை , காலுறை, மழைக்கோட்டு மற்றும் தளவாட சாமான்கள் வாங்கி வழங்காததால் தூய்மை பணிகள் பாதிப்படைகிறது. எனவே , நகராட்சி மூலம் மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடசாமான்கள் வாங்கி வழங்கி விட்டு அதற்கான தொகையினை Tectus நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1. கையுறை<br>2. பச்சைநிற கவர்களில் 50 கிலோ கொள்ளவு கொண்ட குப்பை தொட்டிகள், தலா 150 எண்ணிக்கை.<br>3. துடைப்பம்,<br>4. கம்பூட்கள்,<br>5. மழைக்கோட்டு,<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 4481/2024/எச்<br>தீர்மானம் எண் : 81<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 8 | மேட்டுப்பாளையம் பொது சுகாதாரம் பிரிவு வாகனம் எண். TN40S 4549, TN405 9852, TN40S 4582 மூன்று LCV வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுது பணிகள் செய்ய மாதிரி விலைப்புள்ளி கோரப்பட்டது. அதில் பெறப்பட்ட வாகனத்தின் விலைப்புள்ளி கீழ்கண்டவாறு உள்ளன.<br>1. TN40S 4549 – ரூ. 90152<br>2. TN405 9852 – ரூ. 90742<br>3. TN40S 4582 – ரூ. 92571<br>ஜெயசூர்யா இண்டஸ்டிரிஸ் திருப்பூர் நிறுவனத்திற்கு 3 LCV வாகனம் வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டது குப்பைகளை பிரித்து சேகரிக்கும் பணிகள் தொய்வாக நடைபெற்றதால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இதில் நகராட்சியால் ஒப்படைக்கப்பட்ட வாகனத்தை மீள நகராட்சிக்கு ஒப்படைக்கும்பொழுது தகுதிச்சான்று காலாவதி ஆகிவிட்டதால் இவ்வாகனத்திற்கு தகுதிசான்று பெற்று ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் ஜெய்சூர்யா இண்டஸ்டிரிஸ் நிறுவனம் பழுது பணிகள் நீக்கம் செய்யாமலும் தகுதிச்சான்று பெறாமலும் வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளது. இதனால் பொது சுகாதாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே மேற்கண்ட வாகனத்தை நகராட்சியின் மூலமாக பழுது பணிகள் சரிசெய்தும், தகுதிசான்றுச் சான்று பெறவும் உள்ளூரில் உள்ள அரசு அனுமதிக்கப்பட்ட பணிமனையில் விலைப்புள்ளி பெற்றதில் மேற்கண்டவாறு விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள். எனவே அனுமதிக்கப்பட்ட பணி மனையானது பெஸ்ட் மோட்டார், நரிபள்ளம் ரோடு, மேட்டுப்பாளையத்தில் பழுது பணிகளை நீக்கம் செய்து அதற்குண்டான பில் தொகையினை ஜெய்சூர்யா இண்டஸ்டிரிஸ், திருப்பூர் அவர்களுக்கு வழங்க வேண்டிய பில் தொகையில் பிடித்தம் செய்து சம்பந்தப்பட்ட பணிமனைக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்** 5103/2023/எச் 1<br>**தீர்மானம் எண் :** 82<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தண்ணீர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர் திட்டம் , பழைய குடிநீர் திட்டம் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது, மேற்படி பயன்பாட்டில் குடிநீரில் தினசரி 60 கிலோ குளோரின் வாயு பயன்படுத்தப்பட்டு வருகிறது , மாதம் 1800 கிலோ குளோரின் வாயு பயன்படுத்தி வரும் நிலையில் தற்போது குளோரின் அளவு குறைந்த அளவு இருப்பில் உள்ளது. எனவே 2024 – 2025 –ம் ஆண்டிற்கு தேவையான குளோரின் 900 கிலோ எடையுள்ள 24 சிலிண்டர்கள் ( 21600 கிலோ) உத்தேச மதிப்பு, ரூ. 7.00 இலட்சம் ஆகும் , எனவே மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்** 590/2024/இ 1<br>**தீர்மானம் எண் :** 83<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சாமண்ணா தண்ணீர் நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர் திட்டம் , பழைய குடிநீர் திட்டம் , கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவற்றிக்கு தண்ணீர் எடுக்கும் பவானி ஆற்றில் மழைகாலங்களில் மண் தன்மை அதிக அளவாக இருப்பதால் செந்நிறமாக தண்ணீர் காணப்படுகிறது . எனவே அவற்றை படிகாரம் மூலம் சுத்தகரிப்பு செய்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது , தற்போது மழைகாலமாக இருப்பதாலும் , தற்சமயம் பயன்பாட்டிற்கு படிகாரம் குறைவாக உள்ளதாலும் ஒரு ஆண்டுக்கு தேவையான படிகாரம் 20 டன் கொள்முதல் செய்திடவும் , மேற்காண் உத்தேச செலவினம் தொகை , ரூ. 4 இலட்சம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்** 590/2023/இ 1<br>**தீர்மானம் எண் :** 84<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சியின் மீது திரு . காளிதாஸ் என்பவர் மேட்டுப்பாளையம் நகர நீதிமன்றத்தில் குடிநீர் பொது குழாய் தொடர்பான வழக்கு எண் O.S NO: 54/2024 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே , அவ்வழக்கில் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.எம் . பி. செந்தில் குமார் அவர்களை ஆஜராகவும் , இவ்வழக்கிற்கு உரிய செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 1537/2024/இ1<br>தீர்மானம் எண் : 85<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான KNMT திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் அறிவுறுத்தலின் படி , CARE TAKER பணியிடத்தினை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்த தெரிவிக்கப்பட்டு ,நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் CARE TAKER பணியிடத்தினை வெளிக்கொணர்வு முகமை மூலம் SANKAR LABOUR நிறுவனம் மூலம் 1நபரினை பணியமர்த்தப்பட்டுள்ளது, எனவே , அதற்கான ஊதியத்தினை மேற்காண் நிறுவனத்திற்கு வழங்கவும் அதற்குண்டான செலவினங்களை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 574/2024/இ1<br>தீர்மானம் எண் : 86<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொது சுகாதாரப்பணிகள் செய்யவும், அதனை கிருமி நாசினிகள் கொண்டு சுத்தம் செய்ய சுண்ணாம்புத்தூள், பிளிச்சிங் பவுடர், தேவைப்படுவதால் தற்பொழுது கையிருப்பில் எதுவும் இல்லாததால் சுண்ணாம்புத்தூள், 10டன், பிளிச்சிங் பவுடர் 5டன், வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 87<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் அவ்வப்போது பொதுமக்கள் மற்றும் பணியாளர்களால் தொடரப்படும் உள்ளூர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதிட வழக்கறிஞர்களுக்கு அரசு ஆணையில் தெரிவித்த கட்டண விவரங்களை வழங்க 2024 - 2025 ஆண்டிற்கு தோராயமாக உத்தேச செலவினம் ரூ. 5,00,000/. லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>உள்ளூர் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவ்வப்போது ஏற்படும் வழக்குகளுக்கு எதிர்வாதுரைதயாரித்து வழக்குகளை வாதாட நகராட்சி சட்ட ஆலோசகர் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற நகராட்சி வழக்கறிஞர்களுக்கு கட்டணம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 2419/2024/எச்1<br>தீர்மானம் எண் : 88<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 15 | குடிநீர் விநியோகம் - மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கூட்டுக்குடிநீர் திட்டத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க பயன்படுத்தப்பட்டு வரும் 60 எம்பி மின் மோட்டார் பம்ப் கடந்த 2001 - ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட மின்மோட்டார் பம்ப் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட புதிய மோட்டார் கொள்முதல் செய்திட, உத்தேச செலவினத் தொகை ரூ. 8 ,30,000/ ஆகும். இத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 89<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 16 | இந்நகராட்சியில் நகராட்சி பொறியாளர் மற்றும் அவர்கள் பொது சுகாதார அலுவலர் அவர்கள் ஆகியோர் பயன்படுத்தி வரும் ஈப்பு வாகனங்கள் TN40 C 7087 மற்றும் TN40 C 7079 ஆகிய இரண்டு வாகனங்கள் (பொலேரோ) பயன்பாடுகள் 15 ஆண்டுகள் 31.12.2024 அன்று முடிவு பெற உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 35599/ எம் ஏ1/ நாள் 23.02.2024 - ன் படி, தேர்வுநிலை நகராட்சிக்கு பொறியாளர் மற்றும் இதர அலுவலர்களுக்கு பயன்பாட்டிற்கு 2 பொலேரோ வாகனங்கள் வாங்க வழிவகை உள்ளது. எனவே புதிய 2 பொலேரோ வாகனங்கள் கொள்முதல் செய்திட உத்தேச செலவினம் தொகை ரூ. 30,00,000 / ஆகும். இத்தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு;**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் ; 1634/2021/ இ1<br>தீர்மானம் எண் : 90<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | தலைமை நீரேற்று நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் நவம்பர் – 2023 முதல் ஏப்ரல் – 2024 வரை உண்டான ஆறு மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ. 1,75,985 / ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | மிகை நேரப்பணி ( Hours) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நவம்பர் 2023 | டிசம்பர் 2023 | ஜனவரி 2024 | பிப்ரவரி 2024 | மார்ச் 2024 | ஏப்ரல் 2024 |
| 1 | N. கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 48 | 48 | 56 | 32 | 40 | 64 |
| 2 | K. ரங்கராஜ் | கிளீனர் | 48 | 40 | 72 | 32 | 32 | 64 |
| 3 | S புருஷோத்தமன் | உதவியாளர் | 40 | 32 | 64 | 24 | 32 | 24 |

| வ.எண் | நவம்பர் 2023 | டிசம்பர் 2023 | ஜனவரி 2024 | பிப்ரவரி 2024 | மார்ச் 2024 | ஏப்ரல் 2024 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 11,505 | 11,134 | 13,345 | 8,443 | 9,532 | 15,760 | 69,719 |
| 2 | 11,300 | 9,113 | 16,853 | 8,293 | 7,490 | 15,480 | 68,529 |
| 3 | 6,911 | 5,350 | 10,993 | 4,564 | 5,497 | 4,395 | 37,710 |
| | ரூ. 29,716 | ரூ. 25,597 | ரூ. 41,191 | ரூ. 21,300 | ரூ. 22,519 | ரூ. 35,635 | ரூ. 1,75,958 |

( ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு மட்டும் )

மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 30.03.1989 ம் தேதிய ந.க. எண் : 243272/ 89/ ஓபி 1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் நவம்பர் – 2023 முதல் ஏப்ரல் – 2024 வரை உண்டான ஆறு மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ. 1,75,958 / - ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு;**

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண் : 5220/2011/ இ1

தீர்மானம் எண் : 91

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

18 மேட்டுப்பாளையம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான 12 பள்ளிகள் இயங்கி கொண்டு வருகின்றன . அப்பள்ளிகளுக்கு பள்ளி சுத்தம் செய்யவும் , கழிப்பிடங்கள் சுத்தம் செய்யவும் அரசாணை M.S.NO.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 23.11.2016 ன் படி மொத்தம் 36 தூய்மை பணியாளர்கள் வேண்டியுள்ளது . எனவே , அப்பணியாளர்களை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தினசரி ஊதிய விகிதத்தின் அடிப்படையில் அமர்த்தி கொள்ளவும் 89 நாட்களுக்கு பணி செய்யவும் அதற்கான EPF மற்றும் ESI சேர்த்து தோராய செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு;**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 1693/2024 / எச் 1

தீர்மானம் எண் : 92

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

19 மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2002-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

"சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)

தகுதியானசாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்:16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்விதி (11)கீழ் படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 844 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021UPA, நாள்:07.06.2024ல் தற்போது தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன் படி, நகர விற்பனைக் குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன் படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | -- | 1(தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | -- | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | -- | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | -- | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | -- | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | -- | 1 |
| அரசு சாரா மற்றும் சமுதாய அமைப்பின் பிரதிநிதிகள் | -- | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | -- | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களின் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 844 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | -- | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | -- | 1 |
| (3) | மகளிர் வகுப்பினர் | -- | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி வகுப்பினர் | -- | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (5) | சிறுபான்மையினர் வகுப்பினர் | -- | 1 |
| | (6) | பொது வகுப்பினர் | -- | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3)ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறும் இடம்: நகராட்சி அலுவலகம், மேட்டுப்பாளையம்.

| | | |
|---|---|---|
| வேட்பு மனு பெறப்படும் நாள் | : | 26.07.2024 to 02.08.2024 |
| வேட்பு மனுக்கள் பரிசீலனை நடைபெறும் நாள் (நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை) | : | 05.08.2024 |
| வேட்பு மனுக்கள் விலகல் பெறும் நாள் மற்றும் வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | : | 06.08.2024 |
| தேர்தல் நடக்கும் நாள் மற்றும் நேரம் | : | 14.08.2024 காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| வாக்குப்பதிவு நடைபெறும் இடம் | : | நகராட்சி அலுவலகம், மேட்டுப்பாளையம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4744/2023/எப்1)

தீர்மானம் எண் : 93

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

20 இந்நகராட்சியின் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சேவை வரி மற்றும் வரியில்லா இனமான கடை வாடகைத்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரித் (Goods and service tax) தொகையினை உரிய அரசு தலைப்பில் செலுத்தி 2017 - 2018 ஆம் ஆண்டு முதல் 2022 - 23 ம் ஆண்டு வரை online மூலம் E.Filling செய்து வந்தமைக்கான கட்டணத் தொகையை வழங்குமாறு M/S Mohan and co. என்ற தணிக்கையாளர் நிறுவனத்திடமிருந்து ரூ.3,00,000/க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது . எனவே மேற்படி செலவினம் ரூ.3,00,000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளதாலும் காலதாமதம் ஏற்பட்டால் வட்டி மற்றும் அபராத தொகை அதிகரிக்கக் கூடும் என்பதால் இப்பணியினை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண் : 4618/2020/அ1

தீர்மானம் எண் : 94

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 21 | இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான வாடகை தொகையினை கடை உரிமதாரர்கள் நீண்டகாலம் வாடகை செலுத்தாததால் நகராட்சி வழக்கறிஞர் தி.ரு. M.V செந்தில் குமார் அவர்கள் மூலம் வழக்கு தொடர்ந்து வசூல் செய்வது பொருட்டு இந்நகராட்சிக்கு கடை உரிமதாரர்களுக்கு தொகை செலுத்த கோரி சட்ட அறிவிப்பு வழங்கியமைக்கு தொகை ரூ. 67,500 /- வழங்க கேட்டுள்ளார் . மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 2520/2021/அ1<br>தீர்மானம் எண் : 95<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 22 | இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களுக்கு வசூல் செய்யப்பட்டு வரும் சரக்கு மற்றும் சேவை வரி தாக்கல் செய்ததற்கு திரு. ஆதீஸ்வரன் வரி ஆலோசகர் அனுமதி கோரியுள்ளார் . மேலும் அவசர அவசியம் கருதி ஏப்ரல் 2024, மே 2024 மாதங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி தாக்கல் செய்தமைக்கான கட்டணத் தொகை ரூ. 5000/- வழங்கவும் கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையை வரி ஆலோசகர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 2520/2021/அ1<br>தீர்மானம் எண் : 96<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்கு இரண்டு Desilting Machine கொள்முதல் செய்யப்பட்டு தற்பொழுது உபயோகப்படுத்த தயார் நிலையில் உள்ளது, எனவே மேற்படி இரண்டு வாகனங்கள் இயக்க ஓட்டுநர் இரண்டு பேர் (heavy) மற்றும் நான்கு உதவியாளர்கள் தனியார் வெளிக் ணர்வு (out sourcing) முறையில் அமைத்து கொள்ளலாம். மேலும் இப்பணிக்கு அரசு அனுமதித்துள்ள நாட்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கவும் இப்பணிக்கு ஓட்டுநர் நாள் ஒன்றுக்கு ரூ. 820/- மற்றும் உதவியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 736)- ஆக (வரி இல்லாமல்) ஒரு வருடத்திற்கு ரூ. 19.47.283/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 97<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் .29 மணிநகர் பள்ளியில் குழந்தைகள் மையத்தில் (மைய எண் 222) தற்போது சமையல் அறை இல்லாமல் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. எனவே, மேற்படி மையத்திற்கு சமையல் அறை மற்றும் குழந்தைகள் கழிவறை கட்ட வேண்டியுள்ளது. மேலும் மையக்கட்டிடத்தை பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கும் இப்பணியை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 98<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 25 | தென்மேற்கு பருவ மழை 2024யில் உள்ளாட்சி அமைப்புகள்<br>மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்த்திட ஏதுவாக மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந. க. எண் 10383/2021/மாநி நாள் 23.05.2024 பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மழைக்காலத்தில் தேவையான தளவாடப்பொருட்கள் கருவிகள், இயந்திரங்கள் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருத்தல். சாலையில் ஏதேனும் பழுதடைந்து பள்ளங்கள் ஏற்படுவதால் மழை முடிந்தவுடன் நிரப்பி சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையம் நகராட்சியில் மழை காலத்தில் JCB பணியாளர்கள் மற்றும் சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடன் சரிசெய்ய தேவையான பொருட்களுக்கு உத்தேச மதிப்பீடு ரூ. 9.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது . மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 99<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 26 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29-ல் ராமதாஸ் லே-அவுட்டில் நகர்ப்புற ஊரகத்துறையின் நிதியில் 2013 2014 ஆம் ஆண்டு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது . மேற்ப்படி பூங்கா தற்போது பராமரிப்பு இன்றி மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் முட்புதர்கள் ஏற்பட்டுள்ளது, மின் விளக்குகள் இல்லாமல், தண்ணீர் வசதி இல்லாமல் உள்ளது. எனவே இதனை பராமரிப்பு செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 100<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29 மணி நகர் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் மிதிவண்டி நிறுத்தும் இடம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.00 இலட்சத்தை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 101<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 28 | மேட்டுப்பாளையும் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 29 மணிநகர் பள்ளியில் துவக்கப்பள்ளி கட்டிடங்களின் முன்புறம் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் தளம் மிகவும் பழுதடைந்துள்ளது . அதனால் பள்ளி குழத்தைகள் விளையாடும் போது கீழே விழுந்து, விபத்து நடைபெறுகிறது . எனவே இப்பழுதினை சிமெண்ட் கான்கிரீட் தளத்தை அகற்றிவிட்டு PAVER BLOCK தளம் அமைக்கலாம். மேலும் பள்ளியில் குடிநீர் தரை மட்டத் தொட்டி பழுதடைந்து நீர் சேகரிக்க இயலாத காரணத்தால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது . எனவே இத்தொட்டியை சரிசெய்ய வேண்டியுள்ளது. இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 16,00,000/- நகராட்சி கல்வி நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 102<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 29 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாத வரி மற்றும் வரியில்லா குத்தகை இனங்களுக்கு 04.07.2024 - ம் தேதி நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான அறிவிப்பு 2 இனங்கள் ஸ்ரீ . குமரன் பிரிண்டர்ஸ் ( Flex ) விளம்பர பலகை செய்தமைக்காக கட்டணத் தொகை ரூ. 3500/- வழங்க கோரியுள்ளார் எனவே மேற்படி தொகையினை ஸ்ரீ . குமரன் பிரிண்டர்ஸ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 4614/2014/<br>தீர்மானம் எண் : 103<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 30 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் :3 கதவு எண்: 181- 1 , 181 – A- 1 சிறுமுகை ரோடு பகுதியில் உள்ள சொத்துவரி வரிவிதிப்பு எண்கள் 074/032/900183 , 074/032/900188 உரிய கட்டிடங்கள் பழுதடைந்துள்ளதன் காரணமாக உரிமையாளரால் இடிக்கப்பட்டது . எனவே , இவ்வரிவிதிப்பு எண்களை சொத்துவரி கேட்பிலிருந்து நீக்கம் ( Write off ) செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1544/2024/அ2<br>தீர்மானம் எண் : 104<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 31 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் : 3 வள்ளுவர் நகராட்சிப்பள்ளியில் குடிநீர் தரைமட்ட தொட்டி இல்லாத காரணத்தால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது . எனவே இப்பள்ளியில் தரைமட்ட குடிநீர் தொட்டி கட்டி பின் மோட்டார் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.50 இலட்சம் . இப்பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 105<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 32 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட காட்டூர் பெருமாள் வீதி அங்கன்வாடி கட்டிடம் ( மைய எண் 219 ) சமையல் அறை மற்றும் பொருட்கள் வைப்பு அறையில் சுவர் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது . மேலும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும் . எனவே குழந்தைகள் நலன் கருதி இப்பணியை மேற்கொள்ள உத்தேச செலவினம் மதிப்பீடு ரூ. 1.20 இலட்சம் ஆகும் . எனவே இப்பணியை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 106<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 33 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 4 நேருஜி துவக்கப்பள்ளி வளாகத்தில் சுமார் 50 க்கு மேற்பட்ட குழந்தைகள் பயின்று வருகின்றனர் . அங்குள்ள கழிப்பிடம் பழுதடைந்து மிகவும் மோசமாக உள்ளது . எனவே அப்பள்ளியில் புதிய கழிப்பறைகள் அமைக்கவும் மற்றும் அப்பள்ளி வளாகத்தை சுத்தம் செய்து கான்க்ரீட் தளம் அமைக்கவும் . சுற்றியுள்ள சுற்றுச்சுவர் அமைக்கவும் ஆகும் தோராய செலவினம் ரூ. 15.00 இலட்சம் ஆகும் . இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>தீர்மானம் எண் : 107<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 34 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அருண் நகர் பகுதியில் தற்போது குடிநீர் விநியோகத்திற்காக 15 வது நிதிக்குழு திட்டத்தில் தரைமட்ட தொட்டி கட்டப்பட்டு வருகிறது . மேற்படி பணி முடியும் தருவாயில் உள்ளது . இப்பகுதியில் சுற்று சுவர் அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும் . எனவே இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 13.50 இலட்சத்திற்கு அனுமதியும் மேற்படி பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 108<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 35 | மேட்டுப்பாளையம் நகராட்சிப்பகுதியில் கீழ்கண்ட கட்டிடங்கள் பழுதடைந்து பயனற்று உள்ளது . வரும் மழைக்காலங்களில் இக்கட்டிடங்களால் பொது மக்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதால் கீழ்கண்ட கட்டிடங்களை உரிய அனுமதி பெற்று இடித்து அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>1) கோத்தகிரி சாலையில் அமைந்துள்ள பழைய கழிப்பிடம்<br>2) கோவிந்தசாமி நகர் பகுதியில் அமைந்துள்ள பழைய கழிப்பிடம்<br>3) காட்டூர் சாலையில் அமைந்துள்ள பழைய கழிப்பிடம்<br>4) ராஜபுரம் பகுதியில் அமைந்துள்ள பழைய கழிப்பிடம்<br>5) நகராட்சி ஆணையாளர் அவர்களின் பழைய குடியிருப்பு இல்லம்<br>6) சங்கர் நகர் அங்கன்வாடி கட்டிடம்<br>7) தாசம்பாளையம் சாலையில் அமைந்துள்ள பழைய பேருந்து நிழற்குடை<br>8) சிறுமுகை சாலை , சங்கர் நகர் பேருந்து நிறுத்தத்தில் அமைந்துள்ள பழைய நிழற்குடை<br>9) நெல்லித்துறை சாலையில் அமைந்துள்ள பழைய கழிப்பிடம் .<br>10) பாக்குகார தெருவில் உள்ள பழைய வார்டு அலுவலகம் .<br>11) 10 வது வார்டு மாகாளியம்மன் கோவில் பின்புறம் மகாஜன பள்ளி அருகில் உள்ள பழுதடைந்துள்ள பொதுக் கழிப்பிடம் .<br>12) வார்டு எண் 5 ல் தற்போது உபயோகமில்லாத பழுதடைந்துள்ள பொது குடிநீர் சுத்திகரிப்பு மையம் ( R.O Plant)<br>13) வார்டு எண் 18 ல் உள்ள கழிப்பறை<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 109<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 36 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 மற்றும் 22 ல் அமைக்கப்படஉள்ள ஆழ்குழாய் கிணறுமின் மோட்டர் அமைக்கப்பட்டு குழாய் விரிவாக்கம் செய்து நீர் வழங்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்க்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 110<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 37 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 11 அங்கன்வாடி பழுதடைந்துள்ளதில் முதற்கட்டமாக ராஜபுரம் ஊமப்பாளையம் சாலை , SM Nagar , LS Puram , மற்றும் சாமப்ப லே – அவுட் ஆகிய பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது . குழந்தைகளின் நலன் கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 22.00 இலட்சத்திற்கும் இப்பணிகளை கல்விநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 111<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 38 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அண்ணாஜிராவ் சாலையில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடம் பழுதடைந்துள்ளது இதனை பொதுமக்கள் நலன் கருதி பராமரிப்பு மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 112<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 39 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட மணிநகர் உயர்நிலைப்பள்ளியில் கடந்த ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை 250 ஆகும் . தற்போது இந்த வருடம் 2024 – 2025 கல்வியாண்டில் மாணவர்களின் எண்ணிக்கை 300 ஆகும் தற்போதைய மாணவர்களுக்கு வகுப்பறைகள் போது மானதாக இல்லை எனவே இரண்டு , புதிய வகுப்பறைகள் கட்டித்தருமாறு தலைமையாசிரியர் கேரியுள்ளார் தற்போது இப்பள்ளியில் தமிழக அரசின் நிதியில் தரைதளத்தில் ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. எனவே , இக்கட்டிடத்தின் முதல்தளத்தில் இரண்டு வகுப்பறைகள் அமைத்து கொள்ள இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 18.00 இலட்சத்திற்கு கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 113<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 40 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட சங்கர் நகர் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தின் அருகில் பொது கழிப்பிடம் அமைந்துள்ளது . எனவே அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுசுவர் அமைக்கப்பட வேண்டியுள்ளது . இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.60 இலட்சத்திற்கு கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 114<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 41 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால் இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 668, நாள் 31.08.2023 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர் . M3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் இந்நகர்மன்ற தீர்மானம்: 12 நாள் 30.01.2024 படி 27.04.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திருவாளர். M 3 இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் 28.04.2024 முதல் 26.07.2024 வரை 89 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும் , இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 14.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>1) மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>2) குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண் : 582/2024/இ1<br>தீர்மானம் எண் : 115<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 42 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால் , இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 668 , நாள் 31.08.2023 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர் . M 3 இன்ஜினியரிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் இந்நகர்மன்றத்தால் 26.07.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது . குடிநீர் அவசர அவசியம் கருதி ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திருவாளர். M 3 இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர் 27.07.2024 முதல் 23.10.2024 வரை 89 நாட்களுக்கு அதே விலை விகிதத்தில் குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும் , இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 14.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>தீர்மானம் எண் : 116<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 43 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2023 -2024 ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 15.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது . |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 24 பாரத்பவன் சாலையில் புதிய பகிர்மானக் குழாய் அமைத்தல் பணி | ரூ. 1.60 இலட்சம் | 1) திரு. M. வேலுசாமி<br>2) திரு. C. நாகராஜ் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.96 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M. வேலுசாமி அவர்களின்ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம் .

ந.க.எண் : 582/2023 /இ1

தீர்மானம் எண் : 117

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 44 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள 5 குடிநீர் மேல்நிலை தொட்டிகள் மற்றும் ஒரு தரைமட்ட தொட்டியிலும் அளவு மானிகள் பொருத்தப்பட்டு Online ( கணிணி மற்றும் App) மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது இதன் ஒரு வருட பராமரிப்பு காலம் முடிவடைந்துள்ளது. தற்பொழுது அதனை மீண்டும் ஒரு வருடத்திற்கு பராமரிப்பு புதுப்பிக்க வேண்டியுள்ளது. இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 1.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது . எனவே, இப்பணியினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 118<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 45 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போது சாலை பதிவேட்டின்படி 91.82 கிமீ ( தார்சாலை , சிமெண்ட்சாலை , மண்சாலை மற்றும் இதர சாலைகள்) பராமரிப்பில் உள்ளது . தற்போது நகராட்சி பகுதியில் புதியதாக ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் தற்போது சாலை பதிவேட்டில் உள்ள சாலைகளின் நீளம் மற்றும் அகலம் , பெயர் மற்றும் சாலை அமைக்கப்பட்ட ஆண்டு , ஆகியவை தவறுதலாக உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது . எனவே, தனியார் நிறுவனம் மூலம் அனைத்து வார்டுகளில் உள்ள சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவைகளை நவீன முறையில் அளவீடுகள் செய்து சாலைப்பதிவேட்டில் திருத்தம் செய்யலாம். இதனால் வரும் ஆண்டுகளில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் சிறுபாலம் அமைக்கவும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஏதுவாக இருக்கும் எனவே , இப்பணியை தனியார் நிறுவனம் ஒப்பந்த முறையில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 119<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 46 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் K.K நகர் மேல்நிலைத்தொட்டியில் தடையின்றி நீர்ரேற்ற தற்போது தரைமட்ட தொட்டி கட்டப்பட்டு முடியும் நிலையில் உள்ளது . இப்பணியில் தற்போது மேல்நிலைத்தொட்டியில் நீர் செல்லும் குழாய் சிமெண்ட் குழாய் ( AC PIPE ) ஆக உள்ளது . இதன் அருகில் Press Colony செல்லும் OI குழாயில் அருண்நகர் முதல் K.K நகர் மேல்நிலைத்தொட்டி வரை கொண்டு சென்று மேல்நிலைத்தொட்டியில் குடிநீர் ஏற்ற மேல்நிலைத்தொட்டியில் குழாய் மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது . இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 120<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 47 | மேட்டுப்பாளையம் நகராட்சி 33 வார்டுகளில் உள்ள அனைத்து ஆழ்துளைக்கிணறுகளில் மின்மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதால் குடிநீர் விநியோகம் செய்திட கால தாமதமாகிறது . எனவே, ஆழ்துளைக்கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்திடவும் பராமரிப்புத் தொகை உத்தேச செலவினம் ரூ. 10.00 இலட்சம் ஆகும் . இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 121<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 48 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 காட்டூர் நகராட்சி பள்ளியில் சமையல் அறை கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டப்பட வேண்டியுள்ளது.எனவே , இப்பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 122<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 49 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போது உள்ள மூன்று குடிநீர் திட்டங்களையும் பராமரிக்க நிரந்தர ஊழியர்கள் 3 பேரும் , வெளிக்கொணர்வு ஊழியர்கள் 4 பேரும் மட்டுமே பணி புரிகிறார்கள் . சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றிக்கை ந. க. எண் : 21787/2021/EA2 DT.02.10.2021 யின்படி மொத்தம் 30 ஊழியர்கள் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் .<br>தற்போதைய நிலையில் தலைமை நீரேற்று நிலையத்தில் போதுமான பணியாட்கள் பணியில் இல்லாததால் மின் மோட்டார்கள் இயங்கி , பில்டர்பெட் சுத்திகரிப்பு செய்து இயக்கும் குடிநீர் வழங்கும் பணிகள் முழுமையாக நடைபெறாமல் தடை ஏற்பட்டு பாதிப்பு ஏற்படுகிறது . இதனால் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அதிருப்திக்கு ஆளாகி நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுகிறது . பணிகள் முழுமையாக நடைபெறுவதற்கும் , பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் கிடைப்பதற்கும் நகராட்சியால் பராமரிப்பு செய்து வரும் சாமண்ணா தலைமை நீரேற்று நிலைய பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 112 நாள் 17.08.2022 யில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் படி ஒப்பந்ததாரர் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் , இப்பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களுக்கு சமர்பித்து உரிய மேல் நடவடிக்கை தொடரவும் , மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:<br>அனுமதி அளிக்கலாம் .<br>தீர்மானம் எண் : 123<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 50 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் தேசிய வாழ்வாதார இயக்க திட்டமான நோயாளர் உடன் வரும் உதவியாளர் பாதுகாவலர்கள் தங்குவதற்கு சிறப்பு தங்குமிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது . தேசிய வாழ்வாதார இயக்கம் திட்ட வழிகாட்டுதலின்படி மேற்கண்ட தங்குமிடத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு செய்ய ஹெல்பிங் ஹார்ட்ஸ் எனும் தொண்டு நிறுவனம் ( 13 d இந்திரா நகர் 2 வது வீதி, ரத்தினபுரி, கோயம்புத்தூர் ) முன்வந்து விண்ணப்பித்துள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்<br>தீர்மானம் எண் : 124<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 51 | <u>திருமதி.உமா மகேஸ்வரி நகர்மன்ற உறுப்பினர் வார்டு எண் 3 நகர்மன்றக் கூட்டத்தில் கொண்டு வந்த மன்றப்பொருள் .</u><br>மேட்டுப்பாளையம் நகராட்சி வள்ளுவர் துவக்கப்பள்ளியில் 350 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் . இப்பள்ளியில் போதிய இடவசதியின்றி உள்ளது . எனவே, கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்ட ஏதுவாக பள்ளிக்கு அருகிலுள்ள நீதிபதி குடியிருப்பு அமைந்துள்ள இடத்தை நகராட்சிக்கு ஒப்படைத்தால் வகுப்பறைகள் கட்டவும் பள்ளி அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளவும் ஏதுவாக இருக்கும் .<br>எனவே, வள்ளுவர் நகரவைத் தொடக்கப்பள்ளி அருகில் உள்ள நீதிபதி குடியிருப்பை நகராட்சிக்கு ஒப்படைக்க மாவட்ட நீதிபதி , மாவட்ட ஆட்சியர் ஆகியோரை கேட்டுக் கொள்ள பரிந்துரைக்க மன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது .<br>தீர்மானம் எண் : 125<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 52 | நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் - 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைதளம் ( அ) தரைதளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட சுயசான்றின் அடிப்படையில் இணையவழி ( Single Window Portal ) கட்ட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்தல் தொடர்பாக அரசாணை ( நிலை ) எண் : 94, நாள் : 18.07.2024 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந. நி. 1 ) துறை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் .<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>தீர்மானம் எண் : 126<br>தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |
| 53 | தமிழ்நாட்டில் கட்டிட அனுமதி திருத்தம் வழங்குவதற்கான சுயசான்றளிப்பு திட்டத்தை நகர்ப்புற வளர்ச்சி செயல்படுத்துதல் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 தொடர்பாக அரசாணை ( நிலை ) எண் : 133 , நாள் : 18.07.2024 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் .<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>தீர்மானம் எண் : 127<br>தீர்மானம் : : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |
| 54 | <u>நகர்மன்றத் தலைவர் அவர்களால் நகர்மன்றக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட பொருள்</u><br>மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் நலத்திட்டப் பணிகளை அங்கீகரித்து நடந்து முடிந்த நீலகிரி நாடாளுமன்ற தேர்தலில் அதிகளவில் வாக்களித்து மாண்புமிகு . ஆ . ராசா அவர்களை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதி வாக்காளர்களுக்கு நன்றியினையும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு . ஆ . ராசா அவர்களுக்கு வாழ்த்துகளையும் , பாராட்டுகளையும் நகர்மன்ற தலைவர் , துணைத்தலைவர் , உறுப்பினர்கள் ஆகியோர் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்<br>தீர்மானம் எண் : 128<br>தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது . |